அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 2/2003

எனது இல: 11/309 E 110
அரசாங்க நிர்வாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2003.01.10

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

<u>நிழற்பட பிரதிகள்/படியெடுத்தல் பிரதிகள் மற்றும் ரீசோகிராப் இயந்திரங்களை இயக்குவதற்கான படியொன்றை செலுத்துதல்.</u>

தமது நிரந்தர கடமைக்கு மேலதிகமாக நிழற்பட பிரதிகள், படியெடுத்தல் பிரதிகள் மற்றும் ரீசோகிராப் இயந்திரங்களை இயக்குவதில் ஈடுபடும் அலுவலக பணியாளர் சேவையின் அலுவலர்களுக்கு பின் குறிப்பிடப்படும் படி செலுத்துவதனை அங்கீகரிக்கின்றேன்.

02,

| நிழற்பட பிரதி இயந்திரங்களை இயக்குதல் மாதத்திற்கான பிரதிகளின் எண்ணிக்கை | மாதத்திற்கான படி |
|---|---|
| 1000 வரை | படி இல்லை |
| 2000 வரை | ரூபா 50/- |
| 4000 வரை | ரூபா 100/- |
| 6000 வரை | ரூபா 200/- |
| 8000 வரை | ரூபா 300/- |
| 10000 வரை | ரூபா 400/- |
| 10,000 க்கு மேற்பட்ட | ரூபா 500/- |

03. தொடர்புடைய மாதத்தில் எடுக்கப்படும் நிழற்பட பிரதிகளின் அளவின்படி மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை செலுத்தலாம்.

04. படியெடுத்தல் மற்றும் ரீசோகிராப் இயந்திரங்களை இயக்குவதற்காக பிரதிகள் எடுக்கப்படும் 500 தாள்களுக்கு 8/- ரூபா வீதம் மாதமொன்றுக்கு செலுத்த இயன்ற ஆகக் கூடிய பணம் ரூபா.500/- ஆகும்.

05. தமது நிரந்தர கடமைக்கு மேலதிகமாக இந்தப் பணியில் ஈடுபடுவதாயின் மாத்திரம் மேற்குறித்த படிகள் செலுத்த வேண்டியதுடன் ஒரு இயந்திரத்தில் கடமைக்காக கொடுப்பனவு செலுத்த வேண்டியது ஒருவருக்கு மாத்திரமேயாகும்.

06. மேலும் இந்த சகல பிரதி எடுத்தல்கள் தொடர்பான கண்காணிப்பு அண்மித்த பதவிநிலை அலுவலர்களினால் செய்ய வேண்டியதுடன் சம்பந்தப்பட்ட படிகளை செலுத்தும் போது அவரது சிபாரிசினை பெறுதலும் வேண்டும்.

07. மேற்படி கொடுப்பனவுகள் 2003.01.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படும்.

08. இச் சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்பட்டது.

ஒப்பம் : டிட்டா விமலசிறி
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு